**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தேசிய பத்திரிகையாளர்கள் தினம் | சுதந்திரமான ஊடகத்தின் அடிப்படை மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம் - முதல்வர் வாழ்த்து




முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை:** தேசியப் பத்திரிகையாளர்கள் தினத்தை ஒட்டி பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேசிய பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா தொடங்கப்பட்ட நவ. 16-ம் நாள்தான், தேசிய பத்திரிகையாளர் நாளாக 1996-ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. ஜனநாயகத்தைக் பேணிக் காப்பதில் முக்கியப் பங்காற்றும் ஊடகம் மற்றும் தொலைக்காட்சியின் பணிகளைக் கவுரவிக்க தேசிய பத்திரிகையாளர் நாள் கொண்டாடப்படுகிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றும் போற்றப்படுகிறது. இதையொட்டி நாடு முழுவதும் உள்ள பத்திரிகையாளர்களுக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இது குறித்து தன்னுடைய எக்ஸ் தளத்தில், "உண்மையான ஊடகவியலே துடிப்பான மக்களாட்சியின் கண்காணிப்பாளர், எனவே, தேசிய பத்திரிகை நாளில், ஊடகத்தின்

ஆற்றலையும் பொறுப்பையும் உணர்த்துவோம். அரசியல் அழுத்தங்களுக்கு சிலர் அடிபணியும் இக்காலத்தில், சாய்வற்ற நேர்மையான ஊடகவியலை முன்னெடுத்து, சுதந்திரமான ஊடகத்தின் அடிப்படை மாண்புகளை உயர்த்திப் பிடிப்போம்" எனப் பதிவிட்டுள்ளார்.

## விவசாயிகளுக்கு 15-வது தவணையாக ரூ.18 ஆயிரம் கோடி விடுவிப்பு; பழங்குடியினருக்கு ரூ.24,000 கோடி திட்டங்கள்: பிரதமர் மோடி தொடங்கினார்



ஜார்க்கண்ட் மாநிலம் குந்தி நகரில் உள்ள பிர்சா முண்டா அருங்காட்சியகத்தில் உள்ள அவரது சிலைக்கு பிரதமர் மோடி நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். படம்: பிடிஐ

**குந்தி:** ஜார்க்கண்ட் மாநிலம் குந்தி மாவட்டம் உலிஹட்டு கிராமத்தைச் சேர்ந்தபிர்சா முண்டா சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளார். பழங்குடியினத்தைச் சேர்ந்த இவரது பிறந்த நாள் (நவம்பர் 15-ம் தேதி) ‘ஜன்ஜதியா கவுரவ் திவஸ்’ (பழங்குடியினர் பெருமை தினம்) என்ற பெயரில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என மத்திய அரசு கடந்த 2021-ல்அறிவித்தது. நவ. 15-ம் தேதி ஜார்க்கண்ட் மாநிலம் தொடங்கப்பட்ட நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

இந்நிலையில், 3-வது பழங்குடியினர் பெருமை தினத்தை முன்னிட்டு பிர்சா முண்டாவின் சொந்த ஊரான உலிஹட்டுக்கு பிரதமர் மோடி நேற்று சென்றார். அங்கு அவருக்கு அப்பகுதி மக்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். இதன்மூலம் பிர்சா முண்டாவின் சொந்த ஊருக்கு நேரில் சென்ற முதல் பிரதமர் என்ற பெருமை மோடிக்கு கிடைத்துள்ளது. பின்னர், பிர்சா முண்டா சிலைக்கு பிரதமர் மோடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர், விக்சிட் பாரத் சங்கல்ப் யாத்திரை மற்றும் பிரதமரின் பின்தங்கிய பழங்குடியின குழுக்கள் மேம்பாட்டு திட்டத்தை (பிவிடிஜி) பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். ரூ.24 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பகுதிகளில் சாலை, தொலைத்தொடர்பு, மின்சாரம், குடியிருப்பு, தூய்மையான குடிநீர், கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்படும். இதன்மூலம் 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்குட்பட்ட 22,544 கிராமங்களில் வசிக்கும் சுமார் 28 லட்சம் பழங்குடியினர் பயன்பெறுவர்.

இதுதவிர, ஜார்க்கண்ட் மாநிலத்தில் சாலை, ரயில், கல்வி, நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு உள்ளிட்ட துறைகளில் ரூ.7,200 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இதில் சில திட்டங்களை தொடங்கி வைத்தார். மேலும் நாடு முழுவதும் உள்ள 8 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பிஎம் கிசான் திட்டத்தின் கீழ் 15-வது தவணைத் தொகையாக ரூ.18 ஆயிரம் கோடியை பிரதமர் மோடி விடுவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: ஜார்க்கண்ட் மாநிலத்துக்கு ஏராளமான திட்டங்கள் இன்று தொடங்கப்பட்டுள்ளன. 100 சதவீதம்ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்ட முதல் மாநிலம் என்ற பெருமை ஜார்க்கண்ட் பெற்றுள்ளது. பழங்குடியின மக்கள் நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளனர். அவர்களுக்கு மரியாதையை செலுத்துகிறேன்.

.

ஆனால் முந்தைய ஆட்சியாளர் கள் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கவில்லை. பழங்குடியின போராளிகளுக்கு நாடு எப்போதுமே நன்றிக்கடன் பட்டுள்ளது. பெண்கள், விவசாயி கள், இளைஞர்கள் மற்றும் நடுத்தர-ஏழை மக்கள் ஆகியோர் நாட்டின் வளர்ச்சிக்கான முக்கிய 4 தூண்கள் போன்றவர்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பொருளாதார வழித்தட திட்டம் அனைவருக்கும் பயனளிக்கும்: மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நம்பிக்கை




கோப்புப்படம்

**புதுடெல்லி:** டெல்லியில் நேற்று நடைபெற்ற இந்திய-பசிபிக் பிராந்திய கூட்டத்தில் பங்கேற்ற மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: டெல்லியில் கடந்த செப்டம்பர் 9-10 தேதிகளில் நடைபெற்ற 18-வது ஜி20 உச்சி மாநாட்டில் ஐஎம்இசி திட்டம் முன்மொழியப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா இடையே போக்குவரத்துவழித்தடத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பை

அதிகரிக்க முடியும். அதன் மூலம், சரக்கு போக்குவரத்தின் செயல் திறனை அதிகரிக்க முடியும் என்பதுடன் போக்குவரத்து செலவுகளை குறைத்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், கார்பன் வெளியேற்றத்தை குறைத்தல் ஆகிய எண்ணற்ற நன்மைகளை இந்த திட்டத்தில் பங்கேற்கும் நாடுகள் பெற முடியும்.

ஐஎம்இசி என்பது கப்பல், ரயில்வே மற்றும் சாலை வழிகள் என பல நெட்வொர்க்குகளை உள்ளடக்கிய மல்டிமாடல் பொருளாதர வழித்தட திட்டமாகும். மின்சார கேபிள், அதிவேக டேட்டா கேபிள் மற்றும் ஹைட்ரஜன் பைப்லைன் கட்டமைப்புகளை உருவாக்குவது இந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த திட்டத்தில் கடல்வழியானபோக்குவரத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஜவகர்லால் நேரு, முந்த்ரா (குஜராத்),கண்ட்லா (குஜராத்) துறைமுகங்களுடன், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள புஜைரா, ஜெபல் அலி மற்றும் அபுதாபி உள்ளிட்ட மேற்கு ஆசிய துறைமுகங்களையும், சவுதி அரேபியாவின் தம்மாம், ராஸ்துறைமுகங்களையும் இணைக்க முடியும். இஸ்ரேலில் உள்ள ஹைஃபாதுறைமுகத்திற்கு இணைப்பை வழங்கும் வகையில் சிறப்பு ரயில் சேவைப் பிரிவும் ஏற்படுத்தப்படும்.

சிங்கப்பூர், யுஏஇ, ஜெர்மனி,அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, தென் ஆப்பிரிக்கா நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்திய துறைமுகங்களின் செயல்பாடு சிறப்பான முன்னேற்றத்துடன் காணப்படுகிறது. அதன் காரணமாக, சர்வதேச சரக்கு கப்பல் போக்குவரத்தில் 2014-ல் 44-வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 22-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

.

தெற்காசியா, மேற்கு ஆசியா இடையே பொருளாதார ஒருங்கிணைப்பை ஏற்படுத்த நம்பகமான திட்டமாக ஐஎம்இசி இருக்கும். இதனை உணர்ந்து, அதற்கு தேவையான நிதி ஆதாரம் மற்றும் கொள்கைகளை உருவாக்க இந்தியா தயாராக உள்ளது.

உலகளவில் மந்த நிலை காணப்பட்டபோதிலும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மிகச் சிறப்பாக உள்ளது. நடப்பாண்டில் இந்த வளர்ச்சி 7 சதவீதத்துக்கும் கீழாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், வரும் 2027-ம் ஆண்டில் ஜப்பான் மற்றும் ஜெர்மனி நாடுகளை பின்னுக்குத் தள்ளி இந்தியா உலகப் பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்தை தக்க வைக்கும். அப்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (ஜிடிபி) 5 டிரில்லியன் டாலர் என்ற மைல்கல்லை தாண்டும் என்பது ஐஎம்எப்-ன் மதிப்பீடாக உள்ளது.

2047-ம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடு என்ற அந்தஸ்தை எட்ட வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம். அதற்கேற்ற வகையிலான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இவ்வாறு நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்

## இக்லா விமான எதிர்ப்பு ஏவுகணை சாதனம்: இந்தியா - ரஷ்யா இடையே ஒப்பந்தம் கையெழுத்து



கோப்புப்படம்

**புதுடெல்லி:** இக்லா-எஸ் விமான எதிர்ப்பு ஏவுகணை சாதனங்கள் வினியோகம் மற்றும் உற்பத்தி தொடர்பாக இந்தியா - ரஷ்யா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இக்லா- எஸ் என்பது வீரர்களால் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய ஏவுகணை செலுத்தும் சாதனம் ஆகும். இதனை பயன்படுத்தி தனிப்பட்ட வீரர் ஒருவரே எதிரி நாட்டு விமானம் அல்லது ஹெலிகாப்டரை ஏவுகணையால் சுட்டு வீழ்த்த முடியும். இந்த ஏவுகணை சாதனம் ரஷ்ய ராணுவத்தின் பயன்பாட்டில் உள்ளது.

இந்நிலையில் இந்த ஏவுகணை சாதனத்தை இந்தியாவுக்கு வழங்குவதுடன் அதனை இந்தியாவில் தயாரிப்பதற்கான உரிமத்தை ரஷ்யா வழங்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் இந்தியா- ரஷ்யா இடையே கையெழுத்தாகியுள்ளது.

இதுகுறித்து ரஷ்யாவின் ஆயுத ஏற்றுமதி நிறுவனமான ‘ரோசோபோரோன் எக்ஸ்போர்ட்’ தலைவர் அலெக்சாண்டர் மிகயேவ் கூறும்போது, “நாங்கள்ஏற்கெனவே அதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இந்திய தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்த ஏவுகணை சாதனங்களை இந்தியாவில் தயாரிக்க உள்ளோம்” என்றார்.

எனினும் எந்த இந்திய நிறுவனத்துடன் இணைந்து இந்த ஏவுகணை சாதனம் தயாரிக்கப்பட உள்ளது என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை.

EVA STA